செய்தி வெளியீடு எண்: 860 நாள்: 26.11.2018

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு தொழிலாளர் நல துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபில் அவர்களால் ரூபாய் 65 இலட்சம் மதிப்பில் நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் கீழ் செயல்படும் தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பாக புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக 205 (25 Kg) அரிசி மூட்டைகள், 23,000 பிஸ்கட் பாக்கெட்கள், 200 புரூட்டி, 1,550 போர்வைகள், 21,670 மெழுகுவர்த்திகள், 100 பாய்கள், 100 தலையணைகள், 100Kg சர்க்கரை, 21,000 தண்ணீர் பாட்டில்கள் போன்ற ரூ.17 லட்சம் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபில் அவர்களால் தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டது. இது தவிர தொழிலாளர் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பாக மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களிலிருந்து ரூபாய் 48 இலட்சம் மதிப்பில் நிவாரண பொருட்கள் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் ஆணையர் முனைவர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திருமதி. அ. யாஸ்மின் பேகம், இணை ஆணையர்கள் திரு. சு. பொன்னுசுவாமி, திரு. என். கோவிந்தன் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9